## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

CC.No.122-2024 **LW.7** **P.W.7**

| | | | |
|---|---|---|---|
| Name | மருத்துவர் திரு.கோவிந்தராசு | Caste | |
| Father/Husband Name | மதுரைமுத்து | Calling | |
| Village | விருத்தாசலம் | Religion | |
| Taluk | விருத்தாசலம் | Age | 36 |
| District | கடலூர் | Time | **11.45** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி30..04.2026 நாளாகிய இன்று திரு..M.ஆசிப் முகமது பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**1 முதல் 4 எதிரிகளும் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது விருத்தாசலம் அரசு மருத்துமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.05.2024 அன்று இரவு 10.15 மணியளவில் நான் விருத்தாசலம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது கடலூர் மாவட்டம், விருத்தாசலம் பெரியார் நகரை சேர்ந்த ஜென்ஸி க–பெ.கோபி என்பவரை அவரது அப்பா பூபதி, அவருடைய மகள் கீர்த்தனா ஆகியோர் என்னிடம் சிகிச்சைக்கு அழைத்துவந்தார்கள் நான் அவரை விசாரணைசெய்தபோது 12.05.2024 ம் தேதி இரவு 10.15 மணியளவில் டி.அகரத்தில் வைத்து அடையாளம் தெரிந்த மூன்று நபர்கள் கட்டையால் தன்னை தாக்கிதாக என்னிடம் கூறினார். அவரை நான் பரிசோதனைசெய்தேன். அவர் 12–05–2024 ம் தேதி முதல் 13–05–2024 ம்தேதி வரை உள்நோயாளிகாக சேர்த்து சிகிச்சை அளித்தேன் அவருக்கு வலது பக்க கண்ணத்தில் 1– 1 செமீ அளவுள்ள சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கினேன். 27–05–2024 தேதியிட்ட காயச்சான்று **அ.சா.ஆ.2** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரனைசெய்தார்கள். மேற்படி நபருக்கு சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் ? உள்ளது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் சொன்ன காயங்களை தவிர வேறுவெளிபுற காயங்கள் இல்லை என்றால் ? சரிதான். காயச்சான்றிதழில் சிக்ச்சைக்கு வந்த நபர் சொன்ன வாக்குமூலத்தை தான் நான்பதிவுசெய்தேன் என்றால் ? சரிதான். சிராய்ப்பு காயம் சாதாரண வேலை பார்க்கும்போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் ?

உள்ளது. போலிஸார் விசாரிக்கும்போது நான்சொல்லியதின் அடிப்படையில் 161(3) வாக்குமூலம் தயார்செய்யப்பட்டது.

**மறு விசாரணை இல்லை.**

**TYPED TO MYDICTATION OPENCOURT INPRESENCE OF ACCUSED READOVER TO THE DEPONENT AND ADMITTED BY HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
**TITTAGUDI**